தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 11, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஜூலை 26, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

நம் வருமானத்தின் அளவறிந்து, அதற்கு தக்கபடிதான் பிறருக்கு உதவவேண்டும். அதுவே பொருளைச் சேமித்து பாதுகாத்து வாழும் வாழ்க்கை நெறியாகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய கல்விக் கொள்கை, மேட்டூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்ட 16 நபர்களுக்கு கண் பார்வை பறிபோனது, தமிழ்நாட்டில் அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்வது குறித்து, அரசு ஊழியர்களின் வேண்டுகோளை ஏற்று, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கல்விக் கடனை உடனே

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூலை 26

திரும்பச் செலுத்த முடியாத மதுரை, அவனியாபுரத்தைச் சேர்ந்த திரு. லெனின் தற்கொலை, டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் திருப்பூரைச் சேர்ந்த மருத்துவ மாணவன் திரு. சரவணன் மர்ம மரணம் போன்ற 34 ஒத்திவைப்புத் தீர்மானங்களை இந்த அவையிலே எடுத்து விவாதிக்க வேண்டுமென்று நாங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறோம். செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியன்று இந்த அவையின் கூட்டம் முடிவடையவிருக்கிறது. எனவே, நாள் கணக்கைப் பார்த்தால், ஒரு நாளைக்கு இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்தால்தான் அவற்றை முழுமையாக எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வரும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு முக்கியத்துவம் தந்து, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஸ்டாலின், நீங்கள் சொன்னவற்றிற்கு உரிய பதில்கள் வருகின்றபோது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், கொஞ்சம் இருங்கள்.

(ஆ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோருதல்

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கூட்டுறவு வங்கிகளில் சிறு, குறு விவசாயிகள் வாங்கிய கடன்களைத்தான் இன்றைக்கு தள்ளுபடி செய்வதாக அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்பது அனைத்து விவசாயிகளுடைய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; அதேபோல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கியிருக்கிற கடன்களையும் தள்ளுபடி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக